5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக்கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தாறாவது, நூற்று ஐம்பத்தேழாவது, நூற்று ஐம்பத்தெட்டாவது, நூற்று ஐம்பத்தொன்பதாவது ஆகிய நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகச் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவையினுடைய தலைவரவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதம் பணிந்து 1994—95ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, குழுவின் இருநூற்று இருபத்தெட்டு மற்றும் இருநூற்று இருபத்தொன்பதாவது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அறிவிப்புகள்

(அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1995-96, மொழிதல் (ஆ.செ)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995—96-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitution of India,

1995 மார்ச் 28] [பேரவைத் தலைவர்]

I, M. Channa Reddy, Governor of Tamil Nadu hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for the grants in advance during the financial year 1995-96."

நண்பகல் *12-00*

7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1995-96—வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *1995-96-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர்.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995--96-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய, 27—3—1995ஆம் தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 1995—96 ஆம் ஆண்டிற்கான உடனடி செலவிற்காக, மொத்தமாக ரூபாய் 2,598 கோடியே, 25 இலட்சத்து, 60 ஆயிரத்திற்கு மேற்படாத தொகை, அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.